தினமணி

## 'வேளாண் கல்விக்கு வேலை வாய்ப்பு குறையாது'

First Published : 02 Jan 2012 01:14:39 PM IST

காரைக்கால், ஜன. 1: வேளாண் கல்வி பயில்வோருக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலை ஏற்படாது என்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி. முருகேசபூபதி கூறினார்.

காரைக்கால் மாவட்டம், நெடுங்காடு பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் மாணவர் மன்றத்தைத் தொடக்கிவைத்து மேலும் அவர் பேசியது: வேளாண் கல்வி பயிலும் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் பயில வேண்டும். வேளாண்மையிலும், வேளாண் சார்ந்த பிற துறையிகளிலும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. காரைக்காலில் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் தமிழ்நாட்டின் பிற வேளாண் கல்லூரிகளில் படித்து வெளியேறியவர்கள் உலக அரங்கில் சிறந்த நிலையில் உள்ளனர். இது வேளாண் கல்விக்கு கிடைக்கும் நற்சான்றாகும்.

வேளாண் கல்வியில் புதுப்புது நுணுக்கங்களை அறிந்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். வேளாண் மாணவர்களுக்கு மிகச் சிறந்த விஞ்ஞானியாகவும், ஆட்சியாளர்களாகவும், விவசாயத் தொழில் அதிபர்களாகவும் ஆகமுடியும் என்ற தன்னம்பிக்கை அவசியம். வேளாண் மாணவர்களுக்கு வேலை இல்லை என்ற நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இதை உணர்ந்து படிக்க வேண்டும். இதன்மூலம், இலக்கை நிச்சயம் எட்டலாம் என்றார் அவர். மாணவர் மன்றச் செயலராகப் பொறுப்பேற்ற மாணவர் ஷியாம்சுந்தர், மன்ற செயல்திட்ட அறிக்கை வாசித்தார்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் வி. செல்லமுத்து தலைமை வகித்தார். மாணவர் மன்ற ஆலோசகர் முனைவர் எஸ். ஜார்ஜ்பேரடைஸ் வரவேற்றார். மாணவர் மன்ற துணைச் செயலர் பி. புவனேஸ்வரி நன்றி கூறினார்.

நிறைவாக மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**மானிய விலையில் விவசாயிகளுக்கு பவர் டில்லர்**

First Published : 02 Jan 2012 11:25:30 AM IST

ஸ்ரீவைகுண்டம், ஜன.1: கருங்குளம் ஒன்றியப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு பவர் டில்லர் மானிய விலையில் வழங்கும் விழா நடைபெற்றது.

தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தின கீழ் கருங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாயிகள் 20 பேருக்கு மானிய விலையில் பவர் டில்லர் வழங்கும் விழாவுக்கு கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் இசக்கி தங்கம் தலைமை வகித்தார்.

கருங்குளம் ஒன்றிய ஆனையர் லீமாரோஸ் முன்னிலை வகித்தார். 20 பேருக்கு பவர் டில்லர்களை வழங்கி ஒன்றியத் தலைவர் பிச்சையா பேசினார். வேளாண்மை அலுவலர் அஜ்மல் கான் நன்றி கூறினார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**சம்பா பயிரில் இலைகருகல் நோய் வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,02:26 IST

கருத்தை பதிவு செய்ய

வேதாரண்யம்: வேதாரண்யம் வட்டாரத்தில் சம்பா பயிரில் ஏற்பட்டுள்ள இலைகருகல் நோயை சரிசெய்ய, வேதாரண்யம் வட்டார விவசாய உதவி இயக்குனர் மணிகண்டன் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

மாறுப்பட்ட தட்பவெப்ப நிலை காரணமாகவும், மழைக்காற்றின் சீற்றத்தாலும், வேதாரண்யம் வட்டாரத்தில், நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் ஏற்பட்டுள்ளது. சம்பா நெற்பயிரின் இலைகளில் இருஓரங்களிலும் மஞ்சள் கலந்த பழுப்பு நிற திட்டுக்கள் தோன்றி, கருகியதைபோன்ற தோற்றத்துடன் காணப்படும்.

இதைக்கட்டுப்படுத்த விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். தழைச்சத்து உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில், ஏக்கருக்கு 110 கிலோ வீதம் இடவேண்டும். நோய் எதிர்ப்பு

தன்மையுள்ள நெல் ரகங்களான, ஐ.ஆர்.,- 20, பி.கே.எம்.,- 6 போன்ற ரகங்களை சாகுபடி செய்யலாம்.
சூடோமோனஸ் புளூராசன்ஸ் என்ற பாக்டீரியா உயிர்க்கொல்லி மருந்தினை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் நன்கு மக்கிய தொழுஉரம் 20 கிலோ அல்லது ஆற்றுமணல் 20 கிலோவுடன் சேர்த்து தூவவேண்டும். இலைவழி தெளிப்பாக சூடோமோனஸ் பாக்டீரியா உயிர்க்கொல்லி மருந்தினை ஏக்கருக்கு 400 கிராம் அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம்.
இலைவழி தெளிப்பாக காப்பர் ஆக்ஸிக் குளோரைடு 500 கிராமுடன், 120 கிராம் புரோ இஸ்ட்ரேப்டோசைக்கிளின் கலந்து ஏக்கருக்கு 200 லிட்டர் கரைசலை கை தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம். மேற்கண்ட பயிர்சாகுபடி மேலாண் தொழில்நுட்பங்களைக் கையாண்டு, நெற்பயிரை உரிய முறையில் பாதுகாத்து, அதிக அளவில் மகசூல் பெறலாம்.

**கொள்முதல் விலை அறிவிக்காமல் இழுபறி : கரும்பு விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,03:37 IST

தமிழகத்தில், ஆறு லட்சத்துக்கும் அதிகமான கரும்பு விவசாயிகள் உள்ளனர். நவம்பர் மாதம் துவங்கி, ஆறு மாதங்கள் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படும் கரும்புகள் அறுவடை செய்யப்படுகின்றன. கூட்டுறவு, தனியார் என, 45 சர்க்கரை ஆலைகள் தமிழகத்தில் செயல்படுகின்றன. குறைந்தபட்ச கொள்முதல் விலையை ஆண்டுதோறும் அரசு அறிவிக்கிறது. கடந்தாண்டு நிலவரப்படி டன்னுக்கு, 1,900 ரூபாய் கொள்முதல் விலையாக உள்ளது; அதை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும், வயலில் கரும்பை அறுவடை செய்து, அதற்கு ஏக்கருக்கு, 400 முதல், 700 ரூபாய் வரை வெட்டுக்
கூலியாகப் பிடித்துக் கொண்டு தொகையை ஆலைகள் வழங்குகின்றன.
வெட்டுக்கூலி பிடிக்காமல் முழு கொள்முதல் விலையை வழங்கும் முறையையும் கொண்டு வர, விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்தாண்டுக்கான கொள்முதல் விலை இதுவரையிலும் அறிவிக்கப்படாதது, விவசாயிகளை மேலும் வேதனை அடைய செய்துள்ளது.
இதுகுறித்து விவசாயிகள் சங்கத்தினர் கூறியதாவது: இந்தாண்டு இன்னமும் விலை நிர்ணயிக்கவில்லை. பழைய விலைக்கே கரும்பு கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். மேலும், ஆலை வாயில் விலையை நிர்ணயிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கோரிக்கையை விரைவில் நிறைவேற்றாத பட்சத்தில், போராட்டத்தில் இறங்கவும் திட்டமிட்டுள்ளோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**விவசாயிகளுக்கு உர உற்பத்தி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,03:36 IST

கருத்தை பதிவு செய்ய

மேலூர் :மேலூர் அருகே முன்மாதிரி கிராமமாக தேர்வான கோட்டநத்தம்பட்டியில் வேளாண் துறை சார்பில் இயற்கை உரம், திருந்திய நெல் சாகுபடி, உர உற்பத்தி குறித்து பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் கணேசன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் கந்தப்பன், வேளாண் இணை இயக்குனர் சங்கரலிங்கம் பங்கேற்றனர். இயற்கை உரங்கள் இடுவது, மண் மாதிரி ஆய்விற்கு அனுப்ப வேண்டிய அவசியம், மண்புழு உர உற்பத்தி, சொட்டு நீர் பாசனம் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

குறிச்சிபட்டி, உறங்கான்பட்டி, இ.மலம்பட்டி, அம்பலகாரன்பட்டி, டி.வெள்ளாலபட்டி பகுதிகளில், கோடை நெல் சாகுபடிக்கு ஏ.டி.டி.,(ஆர்) 45, உளுந்தில் வம்பன் 4, வம்பன் 5 ரகங்களும், எள்ளில் டி.எம்.வி.,- 3 ரகமும் மானிய விலையில் தருவதாக உதவி இயக்குனர் கூறினார். துணை வேளாண் அலுவலர் அசோகன் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். உதவி அலுவலர் ராமராஜ் நன்றி கூறினார்.

**விவசாயி கடன் அட்டை திட்டம் : வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,03:12 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி : "விவசாயி கடன் அட்டை திட்டம்' பற்றி தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

""விவசாயி கடன் அட்டை என்பது தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் வழங்கும் வேளாண்மை கடன் திட்டங்களில் ஒன்று. இத்திட்டத்தின்படி விவசாயிகளுக்கு போட்டோவுடன் கூடிய விவசாயிகள் கடன் அட்டையுடன் கூடிய பாங்க் கணக்கு புத்தகம் வழங்கப்படும்.

விவசாயிகளின் குறுகிய கால பயிர் கடன் தேவைகளுக்கு போதுமான அளவில் சரியான நேரத்தில் எளிதில் கிடைக்க செய்வதற்கு இக்கடன் அட்டை உதவுகிறது. ஒரு தடவை கடன் அட்டை பெறும் விவசாயி மூன்று ஆண்டுகளுக்கு அதனை பயன்படுத்தி கடன் பெறலாம். ஒவ்வொரு பயிருக்கும் கடன் பெற விண்ணப்பிக்க வேண்டியதில்லை. சாகுபடி செய்யும் பயிர் மற்றும் பயிர் பரப்பிற்கு ஏற்றவாறு நடப்பிலுள்ள அதிகபட்ச தொகைக்கு உட்பட்டு கடன் தொகை கிடைக்கும்.

அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச தொகைக்கு மிகைப்படாதவாறு எத்தனைமுறை வேண்டுமானாலும் சாகுபடிக்கு தேவையான சரியான நேரத்தில் பணத்தை கடன் அட்டையை காண்பித்து எடுத்துக் கொள்ளலாம். பயிர் அறுவடைக்கு பின் இக்கடனை திருப்பி செலுத்த வேண்டும்.

கடன் அட்டை பெறும் முறை :

விவசாயி கடன் அட்டையை பெற விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளை அணுகி விபரம் பெற்று தேவையான சான்றிதழ்களை அளிக்க வேண்டும். தகுதியான விவசாயிகளுக்கு விவசாயி கடன் அட்டை வழங்கப்படும். இக்கடன் அட்டை பெறுவோர் காப்பீடு பலனையும் பெறலாம். பயிர் சாகுபடி தவிர்த்து பம்புசெட் மற்றும் பைப்லைன் சீரமைப்பு, பண்ணை கருவிகள் வாங்குதல் மற்றும் கால்நடை பராமரிப்பு உள்ளிட்ட இதர நடப்பு விவசாய செலவுகளுக்கும் இதை பயன்படுத்தி கடன் பெறலாம். விவசாயிகளுக்கு எளிதில் கடன் கிடைக்க உதவும் விவசாய கடன் அட்டை வழங்கும் அரசின் இத்திட்டத்தை பயன்படுத்தி விவசாயிகள் பலனடையலாம்" என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**உரமூடைகள் பதுக்கல் விலை எகிறியது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,02:42 IST

கருத்தை பதிவு செய்ய

குரும்பூர் :குரும்பூரில் உரமூடைகள் பதுக்கி வைத்துள்ளதால் விலை எகிறி வருகிறது. குரும்பூர் மற்றும் சோனகன்விளை பகுதியில் உள்ள உரக்கடைகளில் உரமூடைகளை பதுக்கி வைத்து தட்டுப்பாட்டை உருவாக்கி அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். காலாவதியான தரமற்ற பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் போலியான பூச்சிக் கொல்லி மருந்துகளை விற்று விவசாயிகளை நஷ்டமடையச் செய்கிறார்கள்.

அதனால் அரசு நிர்ணய விலை பட்டியல் விவசாயிகளுக்கு தெரியும்படியும் இருப்பு மூடை விவர பட்டியலும் ஒவ்வொரு கடை முன்பும் வைக்க வேண்டும். மேலும் உரமூடைகளை பிரித்து கலப்படம் செய்து வருவதாகவும் தெரியவருகிறது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராமையா கூறியுள்ளார்.

**மா, பலா, முந்திரி முற்றிலும் அழிந்தது : மகசூல் பெற 10 ஆண்டுகள் ஆகும்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,00:51 IST

கடலூர் :""எங்களை வாழ வைத்த மா, பலா, முந்திரி மரங்கள் முற்றிலும் அழிந்து விட்டது. இனி மரங்களை வளர்த்து மகசூல் பெற 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என புயலால் வீடு, பலா, முந்திரி மரங்களை இழந்த பெண் உருக்கமாக கூறினார். இது குறித்து பண்ருட்டி அடுத்த ஆண்டிக்குப்பம் சகுந்தலா கூறியதாவது:

ஆண்டிற்கு 10 ஆயிரம் வரை பலாப் பழங்கள் மூலம் வருவாய் கிடைக்கும். அதேப்போன்று முந்திரி, மா, புளிய மரங்களில் விளையும் மகசூல் மூலம் வருமானம் கிடைக்கும். புயலால் மரங்கள் அனைத்தும் சாய்ந்து விட்டன. எங்களை வாழ வைத்தது நாங்கள் வளர்த்த மா, பலா, முந்திரி மரங்கள் தான். ஆனால் அனைத்துமே புயல் காற்றில் விழுந்ததால் எங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்பட்டுள்ளது. பண்ருட்டி பகுதி மக்களுக்கு முந்திரி, பலா விவசாயம் மூலம் தான் வருவாய் கிடைத்து வந்தது. மரங்கள் முற்றிலும் விழுந்துள்ளது. இனி மரக் கன்றுகளை வைத்து வளர்த்து நல்ல நிலையில் மகசூல் கிடைக்க 10 ஆண்டுகள் வரை பிடிக்கும் என்றார் சோகத்துடன்.

**"தானே' புயலால் கடலூர் மாவட்டத்தில் 2.37லட்சம் ஏக்கர் பயிர்கள் நாசம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,00:41 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் :"தானே' புயல் தாக்குதலில் கடலூர் மாவட்டத்தில் 2.37 லட்சம் ஏக்கர் பயிர்கள் சேதமடைந்தன. கடலூர் மாவட்டத்தில் நெல், மணிலா, கரும்பு, வாழை என மொத்தம் 2 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்தது. உரிய நேரத்திற்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதால் சம்பா நெல் வடகிழக்கு பருவமழையில் சிக்காமல் தப்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்நிலையில் கடந்த 30ம் தேதி வீசிய புயலில் நெற்கதிர்களில் இருந்த நெல் மணிகள் அடித்துச் செல்லப்பட்டன. இதேப்போன்று பிற பயிர்களும் புயலில் சிக்கி சேதமடைந்தன. மேலும் மா, பலா, முந்திரி உள்ளிட்ட மரங்களும் முற்றிலுமாக முறிந்த சேதமடைந்தன. புயலால் மாவட்டத்தில் ஏற்பட்ட விவசாய பாதிப்பு குறித்து வருவாய் மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் கணக்கெடுப்பு நடத்தியதில் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நெல், 20 ஆயிரம் ஏக்கர் கரும்பு, 10 ஆயிரம் ஏக்கர் பருத்தி, 1,750 ஏக்கர் காய்கறிகள், 5,000 ஆயிரம் ஏக்கர் வாழை, 36 ஆயிரத்து 200

ஏக்கர் முந்திரி, 300 ஏக்கர் பூ, 500 ஏக்கர் பலா, 865 ஏக்கர் கொய்யா, 5,900 ஏக்கர் தென்னை, 3,750 ஏக்கர் வரகு, 325 ஏக்கர் மா, 3,100 ஏக்கர் மணிலா பாதிக்கப்பட்டுள்ளன.

**நெல்லிக்குப்பத்தில் கரும்பு அரவை பாதிப்பு : தியாகதுருகம் ஆலைக்கு அனுப்பப்பட்டது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,00:51 IST

கருத்தை பதிவு செய்ய

நெல்லிக்குப்பம் :புயலால் கரும்பு அரவை பாதிக்கப்பட்டதால் கரும்பு வண்டிகளை வேறு ஆலைக்கு அனுப்பும் பணி துவங்கியது. நெல்லிக்குப்பம் இ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலை "தானே' புயலால் அதிகளவு பாதிக்கப்பட்டதால் கரும்பு அரவை நிறுத்தப்பட்டது. அரவைக்கு கொண்டு வரப்பட்டிருந்த 25 ஆயிரம் டன் கரும்பு கடந்த மூன்று நாட்களாக டிராக்டருடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வேறு ஆலைக்கு அந்த கரும்பை அனுப்ப வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்து ஆலை நிர்வாகத்தின் முயற்சியால் அந்த கரும்புகளை தியாகதுருகம் சர்க்கரை ஆலைக்கு அனுப்பும் பணி துவங்கியது. கூடுதல் போக்குவரத்து கட்டணத்தை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டுமென விவசாய சங்க பிரமுகர் ராமலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

**விதை தேவையை பூர்த்தி செய்ய பணிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,02:50 IST

கோவை : "எதிர்காலத்தில் ஏற்படும் விதை தேவையை பூர்த்தி செய்திட, வேளாண் பல்கலை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது' என, பல்கலை பதிவாளர் சுப்பையன் பேசினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் கோவை சிண்டிகேட் வங்கி சார்பில்,"புதிய பண்ணைத் தொழில்நுட்பங்கள்' எனும், ஒருநாள் விழிப்புணர்வு முகாம், பல்கலை வளாகத்தில் நடந்தது. முகாமை, துவக்கி வைத்து பல்கலை பதிவாளர் சுப்பையன் பேசியதாவது:

விவசாயிகள் புதிய பண்ணை தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தால், பயிர் மற்றும் கால்நடைகளின் உற்பத்தியை, பெருக்க இயலும். உழவர்களின் தேவைக்கேற்ப, தரமான விதைகளை உற்பத்தி செய்வது அவசியம். வருங்காலத்தில், விவசாயிகளின் விதை தேவையை பூர்த்தி செய்திட, தமிழ்நாடு வேளாண் பல்கலை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

வீரிய ஒட்டு நெல் உற்பத்தியில், சீனா முதலிடம் வகிக்கிறது. இந்த வரிசையில், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோ.ஆர்.எச்.,3, கோ.ஆர்.எச்.,4, எனும் இரு வீரிய ஒட்டு நெல் ரகங்களை வெளியிட்டுள்ளது. இவை, இதர நெல் ரகங்களை விட, ஏக்கருக்கு 800 முதல் 900 கிலோ, கூடுதல்

நெல் மகசூல் தரவல்லவை.

தீவிர நெல் சாகுபடி மற்றும் நீடித்த கரும்பு சாகுபடி போன்ற, புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றி, நல்ல லாபம் அடையலாம். தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், துல்லிய பண்ணைய திட்டத்தின் மூலம், எக்டருக்கு இரண்டு லட்சம் ரூபாய் விவசாயிகள் லாபம் பெறுகின்றனர்.

அக்ரி போர்டல், விவசாயி அழைப்பு மையம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வியின் மூலமாக வழங்கப்படும், விவசாயிகளுக்கான பி.எப்.டெக்.,(இளநிலை பண்ணை தொழில்நுட்பம்) படிப்பு போன்றவை மூலம், வேளாண் பல்கலை உழவர்களின் திறமை மற்றும் அறிவை, மேம்படையச் செய்கிறது. இவ்வாறு, அவர் பேசினார்.

சிண்டிகேட் வங்கி துணை பொது மேலாளர் ரபீந்திரநாத், நபார்டு வங்கி உதவி மேலாளர் இனிகோ அருள் செல்வன், சந்தை விரிவாக்க துறை பேராசிரியர் ராமநாதன், வேளாண் பொருளியில் பேராசிரியர் அழகுமணி, நபார்டு வங்கி மற்றும் சிண்டிகேட் வங்கி மூலம் உருவாக்கப்பட்ட உழவர் மன்றங்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,22:57 IST

சேத்தூர் : சேத்தூர் அருகே சோலைசேரியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.ஊராட்சி தலைவர் மாடத்தியம்மாள் துவக்கி வைத்தார். டாக்டர் ரவிச்சந்திரன்,ஆய்வாளர் கணேசன்,உதவியாளர் பன்னீர்செல்வம் சிகிச்சை அளித்தனர். கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், செயற்கை முறை கருத்தரித்தல், சினைபரிசோதனை செய்யப்பட்டது. சிறந்த கிடேரி கன்றுகள் வளர்த்த மூன்று பேருக்கு ஊராட்சி தலைவர் பரிசு வழங்கினார். ஏற்பாடை ராஜபாளையம் நாடார் பள்ளி என்.எஸ்.எஸ்., அமைப்பாளர் லட்சுமணன் மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர்.

**மானியத்தில் சொட்டுநீர் பாசன வசதி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,22:57 IST

சிவகாசி : தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், துல்லிய பண்ணை திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு ,நூறு சதவீத மானியத்தில் சொட்டு நீர் பானச வசதி செய்து தரப்பட உள்ளது.

இத் திட்டத்தில், ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் முதல் ஒன்னரை ஏக்கருக்கு தேவையான சொட்டு நீர் பாசன வசதி ரூ.43 ஆயிரம் செலவில் செய்து தரப்படும். இத் திட்டத்தில் 85 ஏக்கர் நிலம் பயன்பெறும். 75 சதவீத மானியத்தில் 9 ஹெக்டோர் நிலத்தில் சொட்டு நீர் பாசன வசதி செய்து தரப்படும்.

இவ் வசதியை பயன்படுத்த விரும்பும் விவசாயிகள், தாசில்தார் வழங்கிய சிறு, குறு விவசாயிகளுக்கான அடையாள அட்டையுடன், தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். தேசிய மூலிகை பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ், மூலிகை சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில், சிவகாசி தாலுகாவில் 15 ஹெக்டேரில் அவுரி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் ஒரு விவசாயி ஒரு ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்தால், ஒரு ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகள், தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனபெறுமாறு, தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

தினகரன்

**2.32 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அரசு அனுமதி**

பதிவு செய்த நாள் : 1/3/2012 2:02:20 AM



புதுடெல்லி : நடப்பு சீசனில் 2.32 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கியது மத்திய உணவுத்துறை அமைச்சகம். மத்திய அரசு உணவுத் துறையின் முறையான அறிவிப்புக்கு பின்னரே சர்க்கரை ஆலைகள் திறந்த பொது உரிமம் மூலம் (ஓஜிஎல்) சர்க்கரையை ஏற்றுமதி செய்ய முடியும். அதன்படி, நடப்பு 2011&12ன் (அக்டோபர்&செப்டம்பர்)

சீசனில் 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் கூடிய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்தது. இதையடுத்து தற்போது 2.32 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கான முறையான அறிவிப்பை உணவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. உலகின் சர்க்கரை உற்பத்தியில் நம்நாடு 2ம் இடம் வகிப்பதுடன், நுகர்வில் முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**தர்மபுரியில் விளைச்சல் அதிகரிப்பு சாமந்தி பூ விலை கிடுகிடு சரிவு**

பதிவு செய்த நாள் : 1/3/2012 2:30:26 AM



தர்மபுரி : தர்மபுரியில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் சாமந்தி பூ கிலோ ஸீ1 ஆக விலை குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் தொப்பூர், ஜருகு, வெள்ளக்கல், பென்னாகரம், பாலக்கோடு, கடத்தூர், நல்லம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் சாமந்தி பூ அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. தர்மபுரி பூ மார்க்கெட்டிற்கு இவற்றை விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இங்கிருந்து வியாபாரிகள் மொத்தமாக பூக்களை வாங்கி வெளிமாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

மழை, பனி காரணமாக சாமந்தி பூ விளைச்சல் அதிகரித்துள்ளது. புத்தாண்டையொட்டி, சாமந்திக்கு கிராக்கி அதிகம் இருக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்தனர்.

இதற்காக கடந்த சில நாட்களாக அறுவடை செய்யாமல் வைத்திருந்த பூக்களை நேற்று முன்தினம் அதிகாலையில் பறித்து விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ஆனால், அதை வாங்க வியாபாரிகள் வரவில்லை. கிலோ சாமந்தி ஒரு ரூபாய்க்கு கூட வாங்க ஆளில்லை.

இதனால் ஏமாற்றமடைந்த விவசாயிகள் 5 டன் பூக்களை சாலையில் கொட்டினர். தானே புயலால் தரம் பாதித்துள்ளதாகவும், இருப்பு வைத்தாலோ, நீண்ட தூரம் கொண்டு சென்றாலோ பூக்களின் நிறம் மாறி அழுகிவிடும் என்பதாலும் வியாபாரிகள் பூக்களை வாங்கவில்லை. இதனால் அதிக நஷ்டம் ஏற்பட்டதால் விவசாயிகள் நேற்று சாமந்தி பூ அறுவடையை நிறுத்தினர். பொங்கல் பண்டிகைக்காவது சாமந்தி பூவுக்கு நல்ல விலை கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

---

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

### கடலூர் மாவட்டத்தில்

### பலா மற்றும் முந்திரி மரங்கள் அடியோடு அழிந்ததால் விவசாயிகள் கவலை

### 'இன்னும் 15 ஆண்டுகளுக்கு வாழ்வாதாரம் இருக்காது' என்று கண்ணீர்

*பண்ருட்டி, ஜன.3–*

*கடலூர் மாவட்டத்தில் தானே புயல் காரணமாக, 'பல ஆண்டுகள் பழமையான பலா, முந்திரி மரங்கள் அடியோடு அழிந்து விட்டதால், இன்னும் 15 ஆண்டுகளுக்கு தங்களுக்கு வாழ்வாதாரம் இல்லை' என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.*

*கடலூர் மாவட்டத்தில் 'தானே' புயல் தாக்கியதில் பொதுமக்கள் மிகுந்த அவதியடைந்து வருகின்றனர். பண்ருட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் பயிரிடப்பட்டிருந்த 100 ஆண்டுகள் பழமையான பலா மற்றும் முந்திரி மரங்கள் அடியோடு சாய்ந்துள்ளன. இதுதவிர தென்னை, மா, கொய்யா உள்ளிட்ட மரங்களும் வேறோடு சாய்ந்துள்ளன.*

*தவறான தகவல்*

*தானே புயலில் ஏற்பட்டுள்ள சேதத்தால் முந்திரி மற்றும் பலா மரங்களில் மீண்டும் மகசூல் கிடைக்க 15 ஆண்டுகள் விவசாயிகள் காத்திருக்க வேண்டும். இப்போது மரங்களை நட்டால்தான் அடுத்த தலைமுறையினர் அறுவடை செய்து பயன்படுத்த முடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.*

*இதனால் தங்களது, வாழ்வாதாரம் முற்றிலுமாக அழிந்து விட்டது என விவசாயிகள் கண்ணீர் விட்டார்கள்.*

*பண்ருட்டி பகுதியில் சேதத்தை பார்வையிட்ட திரைப்பட இயக்குனர் தங்கர்பச்சான் நிருபர்களிடம் கூறியதாவது:–*

*கல்வி, வேலையில் முன்னுரிமை*

*'சாதாரணமாக ஒரு மரத்தின் மூலம் விவசாயிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5 ஆயிரம் வருமானம் கிடைக்கும். தற்போது ஏற்பட்டுள்ள சேதத்திற்கு ஏற்றார்போல இழப்பீடு வழங்க வேண்டும். 15 ஆண்டுகள் காலத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்த தமிழக*

அரசு சிறப்பு செயலாக்கத்துறையை உருவாக்க வேண்டும். அதன்மூலம் விவசாயிகளின் குழந்தைகளை இலவசமாக படிக்க வைக்க அரசு முன்வரவேண்டும். மேலும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவதற்கு விவசாயிகளின் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.'

இவ்வாறு தங்கர்பச்சான் கூறினார்.